**செ.வெ.எண் -04** **நாள்: 04.12.2018**

## பத்திரிக்கைச் செய்தி

சென்னை, மருத்துவப்பணியாளர் தேர்வு வாரிய தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 43 Opthalmic Assistant பணிக்காலியிடங்களுக்கு மாநில அளவில் உத்தேச பதிவுமூப்பு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு கல்வித்தகுதி பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சியுடன் Opthalmic Assistant சான்றிதழ் வைத்திருக்க வேண்டும். வயது வரம்பு 01.07.2018 நிலவரப்படி ஆதிதிராவிடர்/அருந்ததியினர்/பழங்குடியினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் தவிர)/ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்(முஸ்லீம்) ஆகியோர் 01.07.2018 அன்றைய தேதியில் குறைந்தபட்சம் 18 முதல் 57 வயதிற்குள்ளும் பொதுப்பிரிவினர் 18 முதல் 30 வயதிற்குள்ளும் இருக்க வேண்டும். பொதுப்பிரிவினர் - பொதுமுன்னுரிமையற்றவர்கள் 28.02.2013 வரை பதிவு செய்தவர்களும், பொதுப்பிரிவினர்-பொது முன்னுரிமையுடையவர்கள் 12.11.2018 வரை பதிவு செய்தவர்களும் பரிந்துரைக்கப்பட உள்ளனர். இப்பணிக்கு தகுதியுள்ளவர்கள் தங்கள் வேலைவாய்ப்பு அடையாள அட்டை, சாதிச்சான்று, குடும்ப அடையாள அட்டை மற்றும் அனைத்து கல்விச் சான்றுகளுடன் 05.12.2018-க்குள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் வந்து சரிபார்த்துக் கொள்ளுமாறு அரியலூர், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**